பூங்காவில் தென்றல்: நாட்டிலே நல்லறிவுப் பிரசாரம்!

தென்றலைப் புயலாக்கிய சியாங்கேஷேக் என்னவானுர்?

—(0)—

அவல நிலை மாறக்காணேம்; அடக்குமுறை தர்பாரா?

சுதந்திர சர்க்காரின் போக்கு சிந்தைக்கு விந்தையே!

Phone No 4502
விலை அணு ஒன்று]

Regd.No.M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணுதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—1—50) வெளியூர் (27—1—50) [இதழ் 152

கார் நிகோபாருக்குத் தபால்கள்

சென்னை, ஜன. 25—

எஸ். எஸ். மகாராஜா என்ற கப்பல் 1950-ஜனவரி 20-ஞாயிற்றுக்கிழமையன்று போர்ட்பிளயர் மார்க்கமாக கார் நிகோபாருக்குப் பிரயாணமாகிறது. நகரத் தபாலாபீசுகளில் 1950 ஜனவரி 27-ந்தேதியும், சென்னை ஜெனரல் போஸ்டாபீசில் ஜனவரி 28 ந் தேதி மூற்பகல் 11-30 மணி வரையிலும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் அனுப்பப்படும்.

மீண்டும் விமான கப்பல்

இப்பொழுதுள்ள ஜெட் விமானம், சாதாரண விமானம் ஏற்படுமுன் உபயோகத்திலிருந்த பலூன் ஆகாய கப்பல் ஒன்றை லண்ட் வெண்டி என்ற மாஜி பிரிட்டிஷ் விமானப்படை அதிகாரி தயாரித்து வருகிறார்: இவைதான் பிரயாணத்திற்கு மிக சௌகரியமானதென்பது அவர் அபிப்பிராயம். இந்த விமான கப்பல்களில் சிரத்தை போய்விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் இதைத் தயாரித்திருக்கிறார்.

மலேயாவில் கொள்ளைக் கூட்டத்தினர் ஒழிப்பு

குவாலலம்பூர், ஜன. 25—

மலேயாவில் சென்ற ஆண்டு 613 கொள்ளைக்காரர்கள் கொல்லப்பட்டனர் என்றும், 336 பேர் பிடிபட்டனர் என்றும் மலேயா போலீஸ் கமிஷனர் அறிவித்திருக்கிறார். சரணடைந்தவர்கள் தொகை சுமார் 200 என்று தெரியவருகிறது. (ரூட்டர்)

சென்னை மாநாட்டில் பொதுச் செயலாளர் அண்ணுத்துரை

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டிலே நல்லறிவுப் பிரசாரத்தைச் செய்து வருகிறது. புதியதோர் எழுச்சியை, புதியதோர் புத்துணர்ச்சியை நாட்டிலே உண்டாக்கியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள வாலிபர்கள் போர்ப்படையின் ஈட்டிமுனைகள், கண்ணும் கருத்துமாய்க் காரியத்தைச் சாதிக்கவல்லவர்கள்; அசப்பியதைச் செயலில் காட்டும் செம்மல்கள். சுபாவத்தில் சோம்பேறிகளல்லர்; திராவிட நாட்டிலே புதியதோர் சக்தியை உண்டாக்கவல்லவர்கள்.

நம்முடைய சர்க்கார் தென்றலைப் பயன்படுத்தினால், அது தென்றலாகவே இருக்கும். தென்றலைப் பயன்படுத்தாமல் விட்டால், தென்றல் புயலாக மாறும். பூந்தோட்டத்திலே தென்றலை உலவவிட்டால், நாட்டு மக்களுக்கு நல்ல இன்பம் கிடைக்கும். தென்றலைப் புயலாக்கிய சியாங்கேஷேக் என்ன ஆனுர்? ஹிட்லர் என்ன ஆனுர்? உருமாறிப் போனுர்! முசோலினியின் கதி என்னவாயிற்று? தென்றலைப் புயலாக்கிய காரணத்தால் சியாங்கேஷேக் சிந்தனை குழம்பி, பார்மோஸா தலைநகரிலே ஒளிந்துகொண்டிருக்கிறுர்.

வரியை வாங்கும் சர்க்கார் இனி என்ன செய்யப்போகிறது. ஏழைகள் புனல் சொரிகிறுர்களே! ஏழைகள் சொரியும் கண்ணீர் செந்நீராக மாறி, பின்னர் புரட்சியாக மாறும் என்பதைச் சர்க்கார் உணர்வார்களா? புரட்சித் தீயில் ஏராளமான சாம்ராஜ்யங்கள் வீழ்ந்து மண்ணுனதை சரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் தெரியும்.

—பொதுச் செயலாளர் அண்ணுத்துரை.

[சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய தோழர் சி. என். அண்ணுத்துரை அவர்களின் பேச்சின் சுருக்கம் கீழே தரப்படுகிறது]

தோழர்களே!

சென்னை மாவட்ட முதல் மாநாடாகக் கூடும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு ஊக்கமும் உற்சாகமும் காட்டி நிற்கும் உங்களைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் நாட்டிலேதான் வாழுகிறுமென்றாலும், நாம் கூடியிருப்பது சிங்கம், புலி, கரடிகளுக்கிடையே. இந்தப் பக்கம் சர்க்கஸ். பின்புறம் மிருகக் காட்சிசாலை. இவைகளிலே மிருகங்கள், அவற்றிற்கிடையே நாம் இருக்கிறும். நாட்டின் பெருங்குடி மக்களின் அரசியல் வாழ்வும் அப்படித்தானிருக்கிறது.

நல்லதோர் எதிர்காலம்!

திராவிடர் கழகத்தைவிட்டு விலகிய பிறகு, சென்னையிலே கூடும் முதல் மாநாடு இதுவேயாகும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டில் நல்லாதரவு கிடைத்து வருகிறது என்பதற்கு அதற்கு ஏற்பட்டிருக்கும் நாலூற்றுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்களே போதிய எடுத்துக்காட்டாகும். இதுவரை 380க்கு மேற்பட்ட மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பிரசார மணிகளென விளங்கும் பலரும் ஆங்காங்கு சென்று கொள்கை விளக்கம் கூறிவருகின்றனர், இவையெல்லாம், முன்னேற்றக் கழகத்திற்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

திராவிடக் கழகத்தாரிடம் நமக்குப் பகையில்லை. எந்த இடத்திலும் நாம் பகையுணர்ச்சியைக் காட்டியதில்லை. திராவிடக் கழகத்திலிருந்து பிரியும் வாய்ப்பைத் தொண்டு வேறுவழியில் நாம் புக நான்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

ஒன்று இதைச் சாக்காக வைத்துக்கொண்டு வேறு ரியலில் புகுவது. மற்றொன்று இதைச் சாக்காக வைத்துக்கொண்டு எனக்கு லாபம் கிடைக்கும் வேறு வழியில் புகுவது.

மூன்றுவது திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது, ஆகிய இந்த மூன்று சந்தர்ப்பங்களையும் விட்டுவிட்டு

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 26—1—50 வியாழக்கிழமை

அதிருப்திக்குரிய நாள்

ஜனவரி 26-ம் நாளாகிய இந்நாள் பொதுவாக விடுதலை வேட்கை யுடையோர்க்கும்; குறிப்பாகத் திராவிடப் பெருங்குடி மக்களனைவர்க்கும், அதிருப்திக்கு - கண்டனத்துக்கு— வெறுப்புக்குரிய நாளாகும். அதற்கான காரணங்கள் முன்னேற்றக் கழகத்தோழர்களால் எடுத்துரைக்கப்பட்டும், விளக்கிக் கூறப்பட்டும் வந்திருக்கின்றன. குறிப்பாகத் திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்களும், பொதுவாக திராவிட மக்களனைவரும் 'குடியரசு விழா' என்ற 'ஏமாற்றுத் திருவிழா'வில் கலந்து கொள்ளாமல், அந்த வகையில், தமது அதிருப்தியைக் கண்டனத்தை, வெறுப்பைக் காட்டிக்கொள்பவராவார்கள் என்று கருதுகிறோம்.

இன்று அரியணை ஏறும் அரசியலமைப்பில், சமதர்ம— சுதந்திர - சோஷியலிஸமணங் கமழாமல், யதேச்சாதிகார— சர்வாதிகார - பாசிச - ஏகக்கட்சி ஆதிக்க துர்நாற்றம் நாறுகிற காரணத்தினால்தான், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள முற்போக்கு மனப்பான்மை கொண்ட இடது சாரி கட்சிகளும், தனிப்பட்டவர்களும் தங்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம், திராவிடத்தில் சுதந்திர சமதர்மத் தனிக்குடியரசாட்சி ஏற்படவேண்டும் என்ற இலட்சியத்தை இதயகீதமாகக்கொண்டிருத்தலால், இந்தியத்துணைக் கண்டத்தை ஒன்றாகப்பிணைத்து வைத்து ஏககட்சியின் ஏகாதிபத்திய மத்தியவல்லரசு ஒன்று அமைவதைக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறோம். அப்படியே அரசியலமைப்பு ஷரத்துக்கள் நமது இலட்சியத்திற்கு விரோதமாக நிறைவேறிக் கொண்டு வரும்போதெல்லாம் நாம் நமது கண்டனத்தை எழுத்து மூலமாகவும், சொல் மூலமாகவும் எழுப்பிக்காட்டினோம். ஏகக்கட்சியின் சார்பாக அரசியலமைப்பு ஏற்படுத்த முனைந்த ஆணவ ஆளவந்தார்களின் செவிகளில் அந்தக் கண்டனக் குரல்கள் விழவில்லை.

திராவிடத்தின் உரிமைகளைப் பறித்துக்கொண்டு, திராவிடரின் அடிமை சாசனம் எனப் புதிய அரசியலமைப்பு அமைந்திருக்கும் காரணத்தால் தான், முன்னேற்றக்கழகம் தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறது; அத்தோடு நின்று விடாமல் அரசியலமைப்பையே தன் இலட்சியத்திற்கேற்ற முறையில் மாற்றியமைக்கத் துணிவு கொள்கிறது! அதற்கான திட்டத்தைத் தீட்ட முற்படுகிறது இன்பத் திராவிடங் காண முனைகிறது. ஆகவே தான், இந்தியக் குடியரசு அமைவது கையறு நிலையென்று எண்ணியோ, இனி ஏதும் செய்ய முடியாது என்று கருதியோ துக்கப்படவில்லை. இந்த நாளைத் துக்க நாளாகவும் கருதவில்லை. அதிருப்திக்குரிய நாளாகக் கருதி, திருப்தியான நிலைமை ஏற்படுகிற வரையில், அக்கவேலைக்கான அறப்போர் புரிந்து வருவது என்ற சூளுரையை மேற்கொள்ள உறுதி பூணும் நாளாகக் கொள்கிறது திராவிட முன்னேற்றக்கழகம்.

குதிரைக்குக்குர்ரம்என்றால், ஆனைக்கு அர்ரம் என்று கணக்கிட்டுக் கொள்ளும் அரசியலறிவுச் சூன்யக்காரர்களும் இருக்கிறார்கள். ஆகஸ்டுப் பதினைந்தில் நடைபெற்ற வெள்ளையன் வெளியேறிய நிகழ்ச்சியையும், ஜனவரி 26-ல் நடைபெறும் புதிய குடியரசு அமைப்பையும் ஒன்றாகக்கருதி, தெளிவை மன்னிறுத்திப் பார்க்காமல் திசைப்பால் ஏற்பட்டக் குழப்பத்தையே மன்னிறுத்தி அரசியலைக் கணிக்கும் அரசியலறிவற்றோர்களும் இருக்கிறார்கள் அவர்கள் ஆகஸ்டுப் பதினைந்துக்கும் ஜனவரி 26க்கும் உள்ள வேறுபாட்டை உணர முடியாதவர்கள்! பரிதாபத்திற்குரியவர்கள். 1947 ஆகஸ்டு 15-ல் வெள்ளையன் வெளியேறுதலைத் தவிர அதன் காரணமாக அதிகார மாற்றம் ஏற்பட்டதைத் தவிர, ஆட்சியிலோ, ஆட்சி வமைப்பிலோ சட்டதிட்டங்களிலோ, நீதிமறையிலோ, நிர்வாக முறையிலோ மாறுதல் ஏதும் ஏற்படவில்லை! ஏற்பட்ட மாறுதல் எல்லாம் இருநூறு ஆண்டுகளாக ஆட்சி புரிந்து வந்த வெள்ளையர் அதிகாரம் வெளியேறிற்று என்பது தான். அந்த வெளியேறும் நிகழ்ச்சி, அரசியல் நல்லறிவு படைத்தோர் அனைவர்க்கும் மகிழ்ச்சியைத் தருவதேயன்றி துக்கத்தைத் தருவதல்ல. அக்காரணம் பற்றிதான் முற்போக்கு உள்ளம்படைத்த அரசியல் நுண்ணறிவு படைத்தோர் பலரும் அன்றுபாராட்டினர். அந்த வெளியேற்றத்தைத் தடுத்தால், வெள்ளையர் ஆட்சி தொடர்ந்து பல ஆண்டுகள் நடைபெறட்டும் என்பதைக் குறிப்பதாகஇருந்ததேயொழிய வேறு வழி இருப்பதாகக் காணப்படவில்லை. ஆகவே தான், அன்று பலரும் வரவேற்றனர். ஜனவரி 26-ம் நாளோ எனில், ஆட்சி முறை மாறும் நாள், அமைப்பு மாறும் நாள், சட்டதிட்டங்கள் மாறும் நாள், திராவிடத்தை மேலும் அடிமைப்படுத்தும் நாள். ஆகவேதான் இந்நாள்கண்டனத்திற்குரிய-வெறுப்பிற்குரிய-அதிருப்திக்குரிய நாளாகக் கருதப்படுகிறது.

இந்நாளில் "புதிய அரசியலமைப்பு எமக்கு அதிருப்தியைத் தருகிறது- இன்பத்திராவிடமே எமது இலட்சியம்" என்ற குறிக்கோளை ஒவ்வொரு திராவிடரும் இதயத்தில் ஏற்றுக் கொள்வீர்களாக! இலட்சியத்திலே உறுதி கொள்வீர்! உழைப்பீர்! வெற்றி காண்பீர்களாக!

சாக்ரடீஸ்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கார்கள். இப்பொழுது பலருக்குத் தெரியுமே! பூமிதான் ஓடுகிறது, சூரியன் ஓடவில்லை என்று. இப்பொழுது சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே ஓடுகிறான் என்ற கருத்தெல்லாம் தூள்தூளாகிவிடவில்லையா?

தமிழ்நாட்டிலே மகாசங்கராந்தி பண்டிகையைத் தமிழர் திருநாளாக மாற்றி இருக்கிறோமே! நம்முடைய சர்க்கார் தென்றலைப் புயலாக்க விரும்புகிறார்களா? அல்லது தென்றலைத் தென்றலாகவே உலவ விடுவார்களா? நம்முடைய சர்க்கார் தென்றலைத் தென்றலாகவே இருக்கும்படி செய்வதுதான் நல்லது. நாங்கள் விரும்பினால் புயலாக மாற்றலாம். சர்க்காரிடம் நமக்குத் தோழமையா விரோதமா?

அறிவியக்கமும்அடக்குமுறையும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சாக்ரடீஸ் தோற்றுவித்த அறிவியக்கமல்லவா நம் இயக்கம். மார்டின் லூதர் போற்றிப்புகழ்ந்த அறிவியக்கமல்லவா நம் இயக்கம்? ஒரு காலத்திலே இராஜாராம் மோகனராய் நம் இயக்கத்திலிருந்ததுண்டு. அம்பேத்கார் வடநாட்டிலே நம் இயக்க வேலையைச் செய்து வருகிறார். தமிழ்நாட்டிலே அறிவியக்கத்தைத் தோற்றுவித்தவர் பெரியார்-இராமசாமி. இந்த அறிவியக்கத்தை அடக்குமுறையென்னும் ஆபத்தான ஆயுதத்தால் அடக்கிவிட முடியாது.

நாம் சொல்லும் சொற்கள் மக்களிடம் செவி வழியாகச் சென்று அப்படியேநெஞ்சிலே பதிந்து இதய கீதங்களாக மாறிவிடுகின்றன. நம்முடைய கிளர்ச்சித் திட்டங்கள் நாட்டிலே புதிய ஜீவசக்தியைத் தந்திருக்கிறது சியாங்கேஷேக் சீனாவில் இருந்தபோது மாசதுங்கின் பெயர் யாருக்குத் தெரியும்? இப்பொழுது சியாங்கேஷேக்எங்கிருக்கிறார்? அரசியல் ஆரூடம் ஆபத்தானது தான், அதற்காகஅதைத் தள்ளிவிடவும் முடியாது. "உழவர்களே, உறங்காதீர்கள்! கிளர்ந்தெழுங்கள்!!" என்று ஓமந்தூராரே சொல்வார் என்று முன்னர் யாராகிலும் எண்ணியிருப்பார்களா?

ஆசாரியா கிருபலானி 'திறமையற்ற சர்க்கார் வெளியே போய்விடுங்கள்' என்று பொதுமேடையிலே சொல்ல, அதை நேரு அவர்கள் எவ்வளவு பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தார்? அரசியல் நிலைமையிலே எது நேரிடும், எது நேரிடாது என்று முன்கூட்டியேசொல்ல முடியாது நம்முடைய நோக்கமெல்லாம் அறப்போர், அறப்போர், அறப்போர்தான்! மக்களிடையே மூடப்பழக்க வழக்கத்தால் வந்தப் பழைய எண்ணங்களைத் தாக்கி எறியும் அறப்போர்! நாட்டிலே நல்லாட்சி ஏற்பட நாம் பாடுபடுவோம் என்று கூறி முடிக்கிறேன்.

இன்று முதல் ஆரம்பமாகும் புதிய அரசியலமைப்பு எமக்கு அதிருப்தியை அளிக்கிறது. சமதர்மக் குடியரசுத் தனி யாட்சித் திராவிடமே எமது இலட்சியம்

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

க்ஷயரோகத்தைத் தடுக்கப் புதிய மருந்து

—(o)—

இங்கிலாந்தில் ஆராய்ச்சி

—(0)—

சென்னை இன்ஸ்டிடியூட் டைரக்டர் தரும் தகவல்

சென்னை, ஜன. 25—

க்ஷயரோகத் வராமல் இருப்பதற்கு சாதகமாக உடல் நலமுள்ளவர்களின் மீது 'பிஸிஜிவாக்ஸின்' என்ற மருந்தை இப்பொழுது இன்ஜெக்ஷன் செய்யப்படுகின்றது. இதைப் போல "வெலே பேஸிலெஸ் வாக்ஸின்" என்ற மற்றொரு புதிய மருந்து விஷயமாக இங்கிலாந்தில் டாக்டர் வெல்லெஸ என்றவர் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருவதாக சென்னை 'கிங்இன்ஸ்டியூட்' டைரக்டர் டாக்டர். ஒய். எஸ். நாராயணராவ் குளோப் நிருபரிடம் நேற்று மாலை கூறினர்.

டாக்டர் நாராயணராவ் அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு ஆங்குள்ள சுகாதாரலேபாரடரிகளையும், சுகாதார ஆராய்ச்சி ஸ்தாபனங்களையும் பார்வையிட்டு சென்னைக்கு திரும்

இந்த "வொலெபேஸிலெஸ்வாக்ஸின்" க்ஷயரோகம் வராமல் தடுக்குமா என்பது இனி போக போகத்தான் தெரியும். இம்மருந்தை ஏராளமாய் உற்பத்தி செய்து ஆயிரக்கணக்கான பேர்களின் மீது பரிசோதனையும், இதனால் நன்மை தீமையா என்பதையும் கவனிக்க வேண்டியது என்று டாக்டர் நராயண ராவ் குறிப்பிட்டார்.

ஆராய்ச்சியில் அமெரிக்கர் ஆர்வம் முக்கியமாய் அமெரிக்க மக்களிடையே விஞ்ஞானத்தில் ஏதாவது ஒரு பாகத்தில் மிகுந்த ஆராய்ச்சிதொடங்குவதுபோல் நடத்தி அதில் ஏதாவது பயன் அடைய வேண்டுமென்கின்ற அவா மிகுதியாக காணப்படுகின்றது என்று டாக்டர் நாராயண ராவ் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது — அதற்காக அவர்கள் லட்சக்கணக்கான டாலர்களை செலவழித்து வருகின்றனர். இதற்காக நன்கொடையும், செல்வந்தர்களிடமிருந்தும் பெருகி வருகின்றன.

உதாரணமாக "ஸிபிலிஸ்" என்ற (பெண்) நோய்க்கு அடிப்படையாக அடிப்படையாக உள்ளது "ஸ்வாஜிடியஸ்" என்ற ஒருகிருமி. இக்கிருமியின் தரத்தை அறியவேண்டுமென்று அமெரிக்க விஞ்ஞானிகள் லட்சக்கணக்கான டாலர்களை செலவழிக்கிறனர் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இத்துடன் பொதுவாக சுகாதார சர்வீஸ்கள் அமெரிக்காவில் தனிப்பட்டதாய் இருக்கின்றன அவைகள் நம் நாட்டில் இருப்பது போல் சர்க்கார் மேல்பார்வையில் இல்லை என்பதைக் குறிப்பிடத்தக்கது.

அறிவுக் கதிர்!

உலக வாழ்க்கைக்குப் புறம்பான விண்ணுலக வாழ்க்கையைப் பற்றி மதத்தலைவர்கள் பிரமாதமாகப் பேசுகின்றனர். ஆனால் நாங்கள் காட்டும் விண்ணுலகம் இம்மண்ணுலகிலேயே நிறுவப்படும். அது மனிதவர்க்கத்துக்குப், பயன்படும் உலகமாக இருக்கும். மனிதவர்க்கம் இதுகாறும் முயன்ற பல இலட்சியங்களுள் இதுவே மிகப் பெரிய இலட்சியமாகும்.

—டிராஸ்கி

திருத்தம்

"மாலைமணி" உள்ளூர் (24-1-50 வெளியூர் (25 1-50) இதழில் தலையங்கத்தில் 5 வது பாராவில் 3 வது வரியில் 'பொருட்படுத்தி" என்ற பதத்தைப் "பொருட்படுத்தாது" என்றும், கடைசிபாராவில் 5-வது வரியில் "தக்க" என்ற பதத்தை "தவக்க" என்றும் திருத்திப் படிக்குமாறு கோருகிறோம்.

சுதந்திர உலகத் தொழிற் சங்க பெடரேஷன்

பிரஸ்ஸல்ஸ், ஜன. 25—

சுதந்திர உலகத் தொழிற் சங்க பெடரேஷனின் நிர்வாக போர்டு மார்ச்சு 1-ல் பிரஸ்ஸல்ஸில் கூடுகிறது. ஆசிய நாடுகளின் சார்பில் இந்திய பிரதிநிதி தோழர் தேவன்ஸென் இதில் கலந்து கொள்ளவிருக்கிறார்.

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

28 - 1 - 50

ஆம்பூர் :— முனுசாமி, க. நெடுஞ்செழியன், ப. துரைஅரசு.

தாராபுரம் :— க. அன்பழகன்.

29-1-50

கணியூர் :— கோவை மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு

அனைத்துக்கும் அடிப்படை பொருளாதார நிலையே

சுதந்திரம் பெற்றோம்; ஆனால் வெற்றி பெற்றோமில்லை

தமிழ்ப் பண்பு காக்க முன்வருக !

பொருளாதார நிபுணர் தோழர் நடராசன் அறிவுரை

"கல்வி எத்தனை அவசியம் என்பதையும், அது எப்படி இருக்கவேண்டும் என்பதையும், இருவர் எடுத்துக் காட்டினாரில்லை; ஆசிரியர்-மாணவர்களின் தொடர்பு பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. மேல் நாட்டு அறிஞர்கள், கல்வி எந்த முறையில் போதிக்கப்பட வேண்டும் என்பது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். கல்வி முதலில் மனதுக்கு ஒருவித நிறைவை உண்டு பண்ண வேண்டும். அதாவது செம்மையைக் கடைப்பிடிக்கும் திறம் மனதுக்கு ஏற்பட வேண்டும். உடல்நிலை நன்கு இல்லாவிட்டால் அறிவு குறைவுபடுகிறது. ஆகவே உடலுக்கும், மனதுக்கும் சமமான நிலை இருக்க வேண்டும். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே எவ்விதத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே இருக்கவேண்டிய தொடர்பு இன்றிருப்பதுபோலல்ல.

இன்று வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை ஆக்க வேலைகளைச் செய்யக்கூடிய மாணவர்கள் இல்லை. சுதந்திரமடைந்தோம்; ஆனால் இன்னும் வெற்றி கிட்டவில்லை. பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டியிருக்கிறது. இனிமேல்தான் பெரிய இயக்கம் செய்யவேண்டியிருக்கிறது. உழைப்பு அதிகமாக வேண்டும். இல்லையேல் எந்த தமிழுக்காக நாம் பாடுபடுகிறோமோ அந்தத் தமிழ்ப் பண்பு இல்லாமற் போய்விடும். அதற்கு தற்கால கல்வி முறையும் ஒரு காரணமாகும்."

என்று சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசனையாளர் டாக்டர் பி. நடராசன் அவர்கள், அண்மையில் சென்னையில் நடைபெற்ற மாணவர் மன்ற ஆண்டுவிழாக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

தோழர் நடராசன் அவர்கள் தமிழ் நாட்டின் பற்றும், தமிழ் மொழிப் பற்றும் மிக்குடையோர் அறிஞர் என்பதை அவரது பேச்சுக்களிலிருந்து அறியக் கிடக்கிறது. அவர் பொருளாதார நிபுணராக மட்டுமின்றி அரசியலும் அறிந்தவராதலால், அரசியலுக்கு அடிப்படையாக வேண்டப்படும் கல்விமுறை பற்றி அழகாக பேசியிருக்கிறார். அறிவு வளர்ச்சிக்கு உடல் நலம் அடிப்படையாக வேண்டப்படுவதென்று என அவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை அரசியலார் கவனித்து ஆவன செய்வாராக.

தோழர் நடராசன் அவர்களின் கூற்றிலிருந்து கல்வி வளர்ச்சி, அறிவு வளர்ச்சி உடல் நலம் இன்னபிறவற்றுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது பொருளாதாரமே என்பது தெளிவாகிறது. ஏழை மக்கள் கல்வி கற்க இயலாமலிருப்பதற்கு பள்ளிக்கூடம் போன்ற வசதிகள் இல்லாதிருப்பது ஒருபுறமிருப்பினும் ஏழ்மை அகலவேண்டும். ஏழ்மை அகல வேண்டுமானால் பொருளாதார நிலை சீர்படவேண்டும். பொருளாதார நிலை சீர்படுவதென்றால் பொருளாதாரச் சமத்துவம் ஏற்படச்செய்தல் என்பதாகும்.

ஆகவே, தோழர் நடராசன் அவர்களின் உரையில் பொருளாதார சமத்துவத்தின் அவசியம் தொக்கி நிற்கிறது.

அடுத்தபடியாக அவர் இன்றைய சுதந்திரத்தின் தன்மையைப் பற்றிக் கூறியிருப்பதும் பாராட்டத் தக்க 'சுதந்திரம் பெற்றுவிட்டோம். ஆனால் இன்னும் வெற்றி கிட்டவில்லை' என்கிறார். வெற்றி என்று அவர் எதைக் கருதுகிறார் என்றால், அதற்குள் பதில் அடுத்த வரிகளிலேயே அடங்கியுள்ளது. "பொருளாதாரத் துறையில் நாம் முன்னேற வேண்டும்." என்கிறார். இவ்விரண்டையும் சேர்த்து இதுதான் தமிழ்ப் பண்பு என்றும் சுட்டிக் காட்டுகிறார். இத்தகைய தமிழ்ப் பண்பை வளர்க்கும் கல்வி முறையே நல்ல கல்விமுறை என்பதையும் பேச்சில் வற்புறுத்தியிருக்கிறார். இத்தகு நல்ல கருத்துக்களை நாட்டிற்கு நல்கிய தோழர் நடராஜன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

அமெரிக்காவுக்கு ரஷ்ய விஞ்ஞானி

நியூயார்க், ஜன. 24—

பிரபல ரஷ்ய பாலே நடிகர் அலெக்ஸாண்டரின் சகோதரரும் பிரபல விஞ்ஞானியுமான மேஜர் [illegible] ஸென்கோ அமெரிக்காவில் அகதியாக குடியேறி இப்பொழுது புடேபெஸ்ட் [illegible] சோவியத் சேவை செய்தவராக இன்று அறிவிக்கப்படுகிறது.

இவரை நாஜிகள் உக்ரானியாவில் கைதுசெய்து மூன்று ஆண்டு காலம் சிறையில் அடைத்து வைத்திருந்தனர். இவரை அமெரிக்கர்கள் விடுவித்தபின் இவர் அமெரிக்க ஜெர்மனியில் தங்கியிருந்தார். பின்னர் அமெரிக்கா சென்றார்.

இவர் ரஷ்யா பற்றிய நுணுக்க விஷயங்களை எல்லாம் யு. எஸ். அதிகாரிகளுக்கு அறிவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

"அதிருப்திக்குரிய நாள்"

ஜனவரி 26 பற்றி தி. மு. க. பொதுச் செயலாளர் அறிக்கை

★

இந்தியத் துணைக்கண்டத்து எல்லா, இன மக்களின் பிரதிநிதித்துவம் பெறாத, முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களால் திராவிடநாட்டு மக்கள் மீது திணிக்கப்படும் இந்திய புதிய அரசியல் திட்டப்படி இந்தியா "குடியரசு" நாடென, ஜனவரி 26-ம் நாள் முதல், பிரகடனப்படுத்தப்படுவதென தீர்மானிக்கப்பட்டு, அமுலுக்கு வரப்போகிறது. இந்தப் புதிய அரசியலமைப்பு, இம்மாபெரும் துணைக்கண்டத்தில் வாழும் பல இன, கலாச்சார மக்களின், எண்ணங்களையும், ஆசைகளையும் பிரதிபலிப்பது அல்ல: ஒரே கட்சியாரால் வகுத்துக் கொள்ளப்பட்ட, முற்போக்கு சக்திகளுக்கு முட்டுக்கட்டையிடும் அடிப்படை ஆசையுடன் அமைத்துக்கொள்ளப்பட்ட திட்டமாகும். எனவே, திராவிட மக்களைச் சுரண்டி, பாசிஸம் வளரவும், ஏகாதிபத்தியப் பிடிப்பு இறுகவும், அமைத்துக்கொள்ளப்பட்டதே இந்த அரசியல் திட்டம். ஆட்சி அதிகாரம் பெற்ற ஏக கட்சியால் தயாரிக்கப்பட்ட இப்புது அரசியலமைப்பால், தென்னாட்டு மக்களின் வாழ்வும் வளமும் முன்னைவிட மோசமாக சீர்குலையவும், சுதந்திர உரிமைகள் பறிபோகவும், வழி செய்கிறது: இதற்கான வகையிலேயே இத்திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

தென்னாடு எல்லாத் துறைகளிலும், எப்போதும், பிற்போக்கான விவசாய நாடாகவேயிருக்கவும், அதே வேளையில் வடநாடு தொழில் ஆதிக்கியம் உடையதாக ஆகவும்—வடநாட்டு முதலாளித்துவம் தென்னாட்டைச் சுரண்டி வாழச் செய்ய வழிவகுப்பதாகவும், இந்த அரசியல் திட்டம் இருக்கிறது. இந்திய நாட்டின் பல்வேறு மாகாணங்களிலுள்ள பல இன, கலாச்சார மக்களின் விருப்பங்களையும், தேவைகளையும், இந்தத்திட்டம் பூர்த்தி செய்யவில்லை; அதே நேரத்தில் மாகாணங்களின் உரிமைகளையும், மக்கள் வாழ்வையும் பறிக்கிறது. ஆகவே, இந்த அரசியல் திட்டம், குடியரசுப் பிரகடனம்-ஜனவரி 26-ம் நாள், நமக்குத் திராவிட நாட்டுக்கு மகிழ்ச்சிதரும் நாளல்ல. இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் இந்த நாளை தங்களுடைய குடியரசு நாள்-எனக்கொண்டாடுவதாக உலக மக்களுக்குக் காட்டவேண்டும் என்ற ஏமாற்றும் எண்ணத்துடன் செய்யப்படும் சூது நாள்.

எனவே திராவிடத்தின் எதிர்காலத்தைப் பாழ்படுத்தும் இப்புது அரசியலமைப்புத் திணிப்பு நாளான ஜனவரி 26-ம் நாளை முன்னேற்றக் கழகம் அதிருப்திக் குரிய நாளாகக் கருதுகிறது.

சென்னை
23—1—1950

— சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர்
திராவிட முன்னேற்றக்கழகம்

லயோலா கல்லூரியில் தமிழ்த் திருநாள்

சென்னை, ஜன. 21—

19—1—50 வியாழன் மாலை 4-30 மணிக்கு சென்னை லயோலாக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்த் திருநாள் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு முன்னாள் மேயர் தோழர் மா. இராதாகிருட்டிணன் (பிள்ளை) தலைமை வகித்தார். தலைவரையும், விழாச் சொற்பொழிவாளர் தோழர் க. அன்பழகன் எம்.ஏ. அவர்களையும் வரவேற்று, சங்கச் செயலாளர் தோழர் ஜி. ஜகந்நாதம் பேசிய பின், தலைவர் தமிழ்த் திருநாள் கொண்டாட்டத்தின் அவசியம் குறித்தும்; உழவர் விழாவின் சிறப்பு குறித்தும் தமது முன்னுரையில் பேசினார்.

அதன் பின் 'மறுமலர்ச்சி' என்னும் தலைப்பில் விரிவாகச் சொற்பொழிவாற்றிய தோழர் க. அன்பழகன் தமிழ்த் திருநாளே ஒரு மறுமலர்ச்சி விழா என்றும், பொங்கல், உழவர் விழா, பாட்டாளி மக்களின் பெருவிழா, புத்தாண்டுத் தொடக்க விழா, என்றும், எனவே மற்றவற்றில் புதுமை காணத் தொடங்கி வைப்பதைப் போலவே, எண்ணத்தில், எழுத்தில்; பேச்சில் எல்லாம், மறுமலர்ச்சி கொள்ள வேண்டும் என்றும், அதற்கு—மூட நம்பிக்கைகள், புராணப் பொய்மைக் கருத்துக்கள், சாதி பேதச் சனியன்கள், வேற்றுமை வளர்க்கும் வைதீகக் கொள்கைகள்- ஒழிக்கப்பட்டு, உரிமை உணர்வும், சமத்துவ நோக்கமும் தழைத்து தோழமை மலரக் கூடிய புதுமைப் புரட்சிக் கருத்துக்களை — வாலிபர்கள்— கல்லூரி மாணவர்கள்-நாட்டிலே பரப்ப முன்வர வேண்டுமென்றும், 'உழவர்' தங்கள் வாழ்விலே உயர்வுபெற உதவவேண்டுமென்றும் விளக்கமாகப் பேசி முடித்தார்.

அதன்பின்:-தலைவர் இராதாகிருட்டிணன் அவர்கள் இடையிலேசெல்ல நேரிட்டதால் தலைமைதாங்கிய தமிழ்ப் பேராசிரியர் தோழர் ஜீ. டேசர்மா-சொற்பொழிவாளரின் கருத்துக்களை ஒட்டி முடிவுரை கூறியபின், தோழர் க. பழனிவேல் அவர்களுக்கும் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது. (ர-வி)

ஆசியா பற்றி நோயல்பேக்கர்

லண்டன், ஜன. 24—

"காமன்வெல்த் நாடுகளுக்கு ஐரோப்பாவைப்போலவே ஆசியாவும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும் என்பதை அறிந்து கொண்டுவிட்டோம்" என்று, காமன்வெல்த் உறவு மந்திரி நோயல் பேக்கர் நேற்று நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- ஆசியாவின் தேவைகள் மிகவும் அவசரமாகக் கவனிக்க வேண்டியவை. இவ்விஷயமாக காமன்வெல்த் நாடுகளிடையே அபிப்பிராயபேதமே இல்லை.

ஐ. நா. வின் டெக்னிகல் உதவி திட்டத்தை நாங்கள் அங்கீகரித்திருப்பதுடன் கடன் உதவி தரும்படி சர்வதேச பாங்கிக்கும் எங்களாலான உதவி செய்து வருகிறோம். ஆசியாவுக்கு உதவுவதற்கான திட்டம் பற்றி ஒரு ஆலோசனை செய்யப்பட்டுவிட்டது. இவ்வேலை ஆஸ்திரேலியாவில் கூடும் கூட்டத்தில் மேற்கொண்டு எடுத்துக் கொள்ளப்படும்.

நான்கு மாதங்களில் 14,495 மணங்கு உணவு மிச்சம்

இந்திய இராணுவம் உணவு விஷயத்தில் சிக்கன உபயோகத்தையும் உற்பத்திப் பெருக்கத்தையும் நான்கு மாதத்துக்கு முன்னால் ஆரம்பித்ததின் பலனாக 1949 டிசம்பர் 15ந் தேதிவரை மொத்தம் சுமார் 14,495 மணங்கு உணவு தானியங்களை இந்தியத் துருப்புகள் மிச்சப்படுத்தியிருக்கின்றனர்.

முதல் இரண்டு மாதங்களில் அதாவது அக்டோபர் 15 வரை 2,619 மணங்கு தானியமே மிச்சப்படுத்தப்பட்டது. ஆனால், அடுத்த இரண்டு மாதங்களிலும் மிச்சப்படுத்தப்பட்ட தானியத்தின் அளவு (11 877 மணங்கு) முந்திய இரண்டு மாதங்களில் மிச்சப்படுத்தப்பட்டதைவிட நான்கு மடங்குக்கும் அதிகமாகும்.

டிசம்பர் 15 வரை மொத்தம் 8,440 ஏகரா நிலத்தில் துருப்புகள் உணவுப் பயிர் சாகுபடி செய்திருக்கின்றனர். நான்கு மாத காலம் பூர்த்தியாவதற்குள் மேற்கொண்டும் 3,371 ஏகரா நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலங்களில் உணவுத்தானியங்கள் தவிர காய்கறிகளும் பழங்களும் கூடப் பயிர் செய்யப்படுகின்றன. இந்தப் புதிய பண்ணைகளில் இதுவரை மொத்தம் சுமார் 30,530 மணங்கு உணவுப்பொருள் உற்பத்தியாகியிருக்கிறது.

பிரெஞ்சிந்திய வாக்கெடுப்பு

சீனாவில் சமீப காலம் வரை பர்மிய அரசப்பிரதிநிதியாக யூ. மின்ட் தெய்ன் என்பவர் வரவிருக்கும் பிரெஞ்சிந்திய வாக்கெடுப்பில் நடுநிலைப் பார்வையாளராக இருப்பார். இவரை இப்பொறுப்புக்கு சர்வதேச நீதிமன்றம் நியமித்துள்ளது. மேற்படி பொதுவாக்கெடுப்பு மார்ச் மாத மத்தியில் புதுச்சேரியிலும், இன்னுமிதர பிரஞ்சுப் பிரதேசங்களிலும் நடைபெறும்.

நன்றியறிதல்

பல தோழர்களும், கழகங்களும் அனுப்பிய இன வணக்கம் வாழ்த்தேற்று என் நன்றியும் வணக்கமும் உரியனவாகுக!

—சத்தியவாணி முத்து

உலகத் தட்ப வெப்ப நிலையில் திடீர் மாற்றமேன்?

தென்துருவ முனையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள்

பிரிட்டன்-நார்வே--சுவீடன் மும்முரம்

உலகம் முழுவதுமுள்ள பொதுவான தட்டவெப்ப நிலை பெரிதும் மாறுபட்டு வருகிறதென்ற ஒரு உண்மையை ஆதாரமாகக்கொண்டு பிரிட்டன், சுவீடன், நார்வே ஆகிய மூன்று நாடுகளையும் சேர்ந்த 14 ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய துருவப் பகுதி ஆராய்ச்சியில் இறங்கியிருக்கின்றனர்.

1952-ம் ஆண்டு முடியும் வரையும் இவர்கள் கோடை, மாரி எதையும் பொருட்படுத்தாமல் உலகின் ஏனைய பாகங்களுடன் துண்டிக்கப்பட்ட ஒரு தென் துருவப் பிரதேசத்திலிருந்து தமது ஆராய்ச்சியை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இம்மாத ஆரம்பத்தில் இலங்கையிலும் முன்னெரு போதுமில்லாத விதத்திலே கடுங்குளிர் தலைகாட்டியதென்பதும், கொழும்பில் 59·4 வரை தட்பவெப்பம் கீழிறங்கிய தென்பதும் குறிப்பிடத்தக்கனவாகும். சமீபத்தில் தென்துருவ முனைக்கு அயலில் உள்ள டெலஸ் கோம்ப் என்ற இடத்திற்குச் சுமார் நாற்பது துருவ நாய்கள் சறுக்கு வண்டிப்பயிற்சி அளிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டதிலிருந்து இப்புதிய ஆராய்ச்சியைப்பற்றிய விஷயங்கள் ஒன்றன் பின்னொன்றாக வெளிவந்திருக்கின்றன. இந்த நாய்கள் விரைவில் அட்சதேசாந்தரம் 10 ஆக தணிக்கப்படும் தென் துருவ முனைப்பகுதியில் உள்ள ஒரு இடத்திற்கு, ஆராய்ச்சி செய்யப்போகும் குழுவொன்றுடன் அனுப்பப்பட விருக்கின்றனவென்று தெரிகிறது.

பிரிட்டன், நார்வே, சுவீடன ஆகிய மூன்று நாடுகளும் திடீரென இப்புதிய துருவ ஆராய்ச்சியில் ஈடுபட்டதற்குக் காரணம், சென்ற சில வருடங்களாக ஹான்ஸ் அமான் என்ற சுவீடிஷ் பேராசிரியர் சேர்த்துவரும் தட்ட வெப்ப மாறுபாட்டுத் தகவல்களேயாகும். இவர் இந்த ஆராய்ச்சிக் குழுவின் சர்வதேச அமைப்புக் கமிட்டியில் ஒரு அங்கத்தவராவார். இவர் சேகரித்துள்ள தகவல்கள் துருவப்பகுதியின் தட்பவெப்ப நிலை, இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மெதுவாக அபிவிருத்தியடையத் தொடங்கியிருப்பதைக் காட்டுகின்றனவாம்.

துருவப் பகுதியின் தட்ப வெப்பம் அபிவிருத்தியடைகிறதென்பதற்குப் பல அத்தாட்சிகள் காணக்கிடக்கின்றன. வட அட்லாண்டிக் பிரதேசத்திலே உள்ள ஐஸ்லாந்து என்ற ஒரு பெரிய தீவில் சுமார் 700 வருடங்கட்கு முன் சாகுபடி செய்யப்பட்ட பிரதேசம், அதன்மேல் இதுவரை மூடுண்டிருந்த பனிப்பாறைகள் உருகிவிட்டதன் காரணமாக வெளிப்பட்டிருக்கிறது. இப்பொழுது இப்பகுதியில் கப்பல் போக்குவரத்து செய்யக்கூடிய காலமும் சுமார் எட்டு மாதத்துக்கு நீடித்திருக்கிறதாம்.

ருஷ்யாவில் அதுவும் பிரதானமாக சைபீரிய உள்நாட்டுப் பிரதேசத்தில் பனிமூட்டம் வர வரக் குறைந்து வருகின்றதாம். வட ஸ்காண்டிநேவியாவில் சுவீடன் பின்லாந்து தேசங்களில் காடுகள் விஸ்தாரமாகி வருவதும் விவசாய முறை வர வர சிறந்து அபிவிருத்தியடைவதும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

இவ்விதம் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து படிப்படியாக ஏற்பட்டு வரும் இம்மாறுதலுக்குக் காரணங்கள் என்னவென்பது இன்னும் சரியாக விளங்கவில்லை. இப்பொழுது ஆராய்ச்சியாளர்கள் முதல முதலாகச் செல்லும் 'குயீன்மாட்' தரை பிரதேச ஆராய்ச்சி இம்மர்மத்தைத் துலக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தும்

லண்டன் வட்டாரங்களில் ஆவல்

லண்டன், ஜன. 25—

காமன்வெல்த் நாடுகள் ஒன்றுக்கொன்று அந்நிய நாடுகளல்லவென்றும், காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான இந்தியா தன் குடியரசு பிரகடனத்தில் பிரிட்டனையும் இதர காமன்வெல்த் நாடுகளையும் குறித்து என்ன வார்த்தையை உபயோகிக்கப் போகிறது என்பது இச்சமயத்தில் கவனிக்கப்படவேண்டிய முக்கியம் என்றும் இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

நேரு சமீபத்தில் பேசியபோது பிரிட்டனை அயல்நாடு என்று குறிப்பிட்டதை பிரிட்டனில் 'அந்நியநாடு' என்று தவறாக அர்த்தம் செய்து கொண்டுவிட்டதென்றும், ஆகவே இந்தியா எந்த வார்த்தையை உபயோகிக்கிறது என்பதில் விசேஷ முக்கியத்துவம் இருக்கிறதென்றும் தென்னாப்பிரிக்க ஹைகமிஷ்னர் காரியாலய அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆஸ்திரேலியா உடன்படிக்கை

மிலன், ஜன. 25—

ஆஸ்திரேலிய சமாதான உடன்படிக்கையில் ஒத்துழைக்காமல், ரஷ்யா கால நீடிப்பு செய்வதற்குக் காரணம் ஜெர்மனியிலும், ஹங்கேரியிலும் தன் படைகளை நீடித்து வைத்துக்கொள்ள விரும்புகிறதென்பதுடன் ஆஸ்திரேலியாவில் தன் பொருளாதார நன்மைக்குரிய வசதி இருக்கிறதே என்று இங்குக் கூறப்படுகிறது.

ஆசிரியருக்கு முடங்கல்

அதிகாரிகள் கவனத்திற்கு

ஐயா,

சங்கரன் கோவில் தாலுகாவில் பருவகால மழை இல்லாமல், குளங்களில் தண்ணீர் இல்லா பற்றாக்குறையால் பயிர்கள் தீய்ந்துவிட்டன. இதனால் சங்கரன் தாலுகாவில் கோரப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. குடிதண்ணீர் கஷ்டமும் ஏற்படுவதாக இருக்கிறது. மக்களுக்கு உணவுக்கவலை அதிகரித்து வருகிறது. பல விவசாயிகள் தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டும், போதிய வருவாய் இல்லாது உணவுப் பொருள்களின் விலைவாசிகளின் உயர்வாலும் பாதிக்கப்படுகிறார்கள். கள்ளமார்க்கட்காரர்களின் திருவிளையாடல்கள் ஓய்ந்த பாடில்லை. கள்ள மார்க்கட்டில் ஒரு கோட்டை நெல் ரூ. 88 (எண்பத்து எட்டாக) விற்பனையாகிறது. சங்கரன் கோவில் சிவ்வாப் பப்ளிக் மார்க்கட்டிலும் சில்லரை விற்பனையாளர்களும் அரிசி அளவை அரைக்கால் படியாகவும், சோளம் ஒன்றரையே மாகாணிப்படியாகவும் கேப்பை ஒன்றரைக்காலே அரைக்கால் படியாகவும், சாமை அரிசி முக்கால் படியாகவும் விற்பனை செய்கிறார்கள். இந்தத் தாலுகாவில் பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்ய வேண்டி, சம்பந்தப்பட்ட அதிகாரிகட்கு பொதுஜனங்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அதிகாரிகள் இந்தத் தாலுகாவில் சுற்றுப்பிரயாணம் செய்து பஞ்ச நிலைமையை நேரில் அறிந்து, பொதுஜனப்பிரமுகர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் அடங்கிய பஞ்ச நிவாரணக் கமிட்டி அமைத்து பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பித்து, போதுமான உணவுப்பொருள்களை சப்ளை செய்து கஷ்டம் இல்லாமல் மலிவான விலைக்கு பொதுஜனங்களுக்குணவுப் பொருள்கள் கிடைக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அவசியமாகும். குடிதண்ணீர்த்திட்டமும் வேண்டும், இந்தத் தாலுகாவில் அநேக குளங்கள், ஏரிகள் கண்மாய்களை, முக்கியமாக வயலி மலையடிப்பட்டி குளங்களை மராமத்து வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டியது முக்கியமாகும்.

சங்கரன்கோவில் கஸ்பாவில், யுத்த காலத்தில் ஏற்பட்ட வீடுகளின் வாடகைகளின் உயர்வு இன்னும் குறையவில்லை. இதனால் ஏழைகள், தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வீடுகளின் வாடகைகளை நியாயமாக குறைக்க வேண்டியது முக்கிய கடமை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

S. M. திருவுடையான்,
சங்கரன்கோவில்

தென்னாப்பிரிக்க ராணுவத் தளபதி ராஜிநாமா

கேப்டவுன், ஜன. 25—

தென்னாப்பிரிக்கயூனியன் ராணுவ தளபதி லெப் ஜெனரல் லென் பெயர்ஸ் ராஜிநாமா செய்துவிட்டார். சில காலமாகவே மலான் மந்திரிசபை பாதுகாப்பு மந்திரி பேரோவுக்கும், ராணுவத் தலைவர்களுக்குமிடையே உள்ள தகராறே இந்த ராஜிநாமாவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்ட முன்னேற்றம்

ஐ.மா.வில் மாபெரும் அணைத்திட்டங்கள்

மாகாணங்களின் நிலவரம்பு பற்றிய விவரம்

புதுடில்லி, ஜன. 22—

ஐக்கிய மாகாணத்தில், ஒரு லட்சம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனமளிக்கக்கூடிய இரண்டு அணைத் திட்டங்கள் சிட்டத்தட்டப் பூர்த்தியாகிவிட்டதாக, உணவு உற்பத்தி இயக்க முன்னேற்றம் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் மத்திய விவசாய மந்திரி காரியாலயத்துக்குக் கிடைத்துள்ள சமீபத்திய அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. கிழக்குப் பஞ்சாபிலும், மைசூரிலும், பயிர்களை அழிக்கும் காட்டு மிருகங்களை அழிக்குவதற்கான ஏற்பாடுகளைப் பலப்படுத்தியது, திருவாங்கூர் கொச்சி யூனியனில் சுமார் 15,000 ஏக்கரில் இருபோக சாகுபடிக்கு வசதி செய்தது, உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் பலனாக அதிகப்படியாக விளையும் தானியத்தின் அளவை மதிப்பிடுவதற்காக பம்பாயில் மூன்று ஜில்லாக்களில் பரிட்சார்த்தத் திட்டங்களை ஆரம்பித்தது. மேற்கு வங்காளத்தில், கூட்டுப்பண்ணைகள் நடத்துவதன் மூலம் தானிய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குள்ள மார்க்கங்களை ஆராய கமிட்டியொன்று அமைக்கப்பட்டது. ஆகியவை கடந்த இரண்டுவார காலத்தில் மத்திய மாகாணங்களில் ஏற்பட்டுள்ள முக்கியமான அபிவிருத்திகளாகும்.

ராஜஸ்தான் யூனியனில் 1952-இறுதிக்குள் அதிகப்படியாக 2-லட்சம் டன் உணவு உற்பத்தி செய்வதற்காக விரிவானதிட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கிணறுகள் வெட்டுதல், குளங்களை மராமத்து செய்தல், நிலமீட்சி குப்பை உரம் உற்பத்தி முதலியவழக்கமான வேலைகள் எல்லா மாகாணங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

பாசன வசதிகள்

ஐக்கிய மாகாணத்தில் 1,600-கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் 4000, கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன. மிர்ஜாபூர் ஜில்லாவில்நாக்வா அணைக்கட்டு வேலை பூர்த்தியாகும் நிலையிலிருக்கிறது. இதன் மூலம் அடுத்த கோடையில் 30,000 ஏக்கராவுக்கு இறுதியாக 70,000 ஏக்கராவுக்கும் பாசனவசதி கிடைக்கும். லலித்பூர் அணைக்கட்டும் கிட்டதட்டப் பூர்த்தியாகிவிட்டது. இதன் மூலம் இறுதியாக 30,000 ஏக்கராவுக்குப் பாசன வசதி கிடைக்கும் மேலும் 20,000 ஏக்கராவுக்குப் பாசன வசதியளிக்கக்கூடிய மற்றொரு அணைக்கட்டின் நிர்மாண வேலையும் ஆரம்பமாகிவிட்டது.

சென்னையில் 1949 டிசம்பர் 31 தேதியுடன் முடிவடைந்த இரண்டு வாரங்களில் 255 கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டன. பிஹாரில் டிசம்பர் மூன்றாவதில் 55 சிறு பாசனத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டன. திருவாங்கூர்-கொச்சி யூனியனில் சுமார் 1,000 ஏக்கராவுக்குப் பாசனமளிக்கக்கூடிய புதிய நீர்ப்பாசனத் திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை நிறைவேற்றிவைக்கப்பட்டுள்ள இறைவைப் பாசனத்திட்டத்தின் பலனாக சுமார் 15 000 ஏக்கர நிலத்தில் இருபோக சாகுபடி செய்வது சாத்தியமாகியிருக்கிறது.

மைசூரில் 1,600 ஏக்கராவுக்குப் பாசன வசதியளிக்கக்கூடிய இரண்டு இறைவைப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டுவருகின்றன. மத்தியபாரதத்தில் இதுவரை 400 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. மேற்கு வங்காளத்தில் 4 பெரிய பாசனத்திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன.

நிலமீட்சி

விந்திய பிரதேசத்தில் உழவு மாடுகள் கொண்டு நிலத்தைத் திருத்திப் பண்படுத்தும் விவசாயிகளுக்கு ஏக்கராவுக்கு ஐந்து ரூபாய் வீதம் சன்மானத்தொகை கொடுக்க அந்த சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். 1949—50— குளிர்காலப் பயிர் சாகுபடி காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 6,39,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய மாகாணத்தில், பங்களாக்களிலுள்ள தோட்டங்களில் உணவு பொருள் சாகுபடி செய்ய சர்க்கார் உதவியளித்திருக்கின்றனர் மத்திய மாகாணத்தில், டிராக்டர்களும், மற்ற விவசாயக்கருவிகளும் வாங்குவதற்காக விவசாயிகளுக்கு மொத்தம் 21,000 ரூபாய் தக்காவிக்கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்காரிடம் பணம் கடன் வாங்கி டிராக்டர்கள் வாங்குபவர்கள் பக்கத்திலுள்ளவர்களின் நிலத்தில் 100 ஏக்கராவையாவது உழுது கொடுக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்காளத்தில், டிசம்பர் 31-ம் தேதியுடன் முடிந்த இரண்டு வாரங்களில் 740 ஏக்கர தரிசு நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டிருக்கிறது. மத்திய பாரதத்தில் 1 400 ஏக்கர நிலம் சாகுபடிக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. கிழக்குப் பஞ்சாபில் 1949 நவம்பரில் 11,170 ஏக்கர நிலத்தில் டிராக்டர்கள் வேலை செய்தன.

காட்டு மிருகங்கள்

கிழக்குப் பஞ்சாபில் பயிர்களை அழிக்கும் காட்டு மிருகங்களைக் கட்டுப்படுத்த, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1949 டிசம்பர் 31-ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 55 காட்டுப் பசுக்கள் பிடிக்கப்பட்டன. 1200 நாய்கள் சுட்டுக்கொல்லப்பட்டன. மைசூரில் பயிர்களுக்குச் சேதம் விளைவித்து வந்த 43 யானைகள் பிடிக்கப்பட்டன.

ராஜஸ்தான் சர்க்கார், 1952 இறுதிக்குள் அதிகப்படியாக 2 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்வதற்கான விரிவான திட்டமொன்றைத் தயாரித்திருக்கின்றனர்.

மேற்கு வங்காளத்தில் கூட்டுப் பண்ணைகள் மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குள்ள மார்க்கங்களை ஆராயும் பொருட்டு, பிரத்தியேகக் கமிட்டியொன்றை அம்மாகாண சர்க்கார் நியமித்திருக்கின்றனர்.

ஐக்கிய மாகாணத்தில் பிராந்திய ரக்ஷாதளத்தைச் சேர்ந்த ஆட்கள் 8 000 ஏக்கர நிலப் பரப்பில் நிலமீட்சி வேலையை நடத்திவருகின்றனர், குப்பை உர உற்பத்தியிலும், டிராக்டர்களை இயக்குவதிலும் இவர்களுக்குப் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

புத்தரின் சின்னங்கள்

கொழும்பு, ஜன. 25—

புத்தரின் சின்னங்கள் இவற்றை பர்மாவுக்குக் கடனாக இலங்கை சர்க்கார் கொடுத்துதவும் என்றும், இவை பர்மிய பிரதமர் தகின் நு இங்கு வந்துவிட்டுப் போகையில் கொண்டு செல்வார் என்றுதெரியவருகிறது.—ரூ கோர்

சிந்தனையாளர் சாக்ரடீஸ் வழித்தோன்றல்கள் நாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாலாவதாக நாட்டு மக்களின் நலிவைப் போக்குவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கினேன். லாப நஷ்டம் தெரியாதவனல்ல நான். கோட்டை கொத்த-

சென்னை மாவட்ட முதல் மாநாட்டு...

ளங்களை அறியாதவனல்ல நான்.

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டிலே நல்லறிவுப் பிரசாரத்தைச் செய்து வருகிறது. புதியதோர் எழுச்சியை, புதியதோர் புத்துணர்ச்சியை நாட்டிலே உண்டாக்கியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள வாலிபர்கள், போர்முனையின் ஈட்டிமுனைகள், கண்ணும் கருத்துமாய்க் காரியத்தைச் சாதிக்கவல்லவர்கள் செப்பியதைச் செயலிற் காட்டும் செம்மல்கள். சுபாவத்தில் சோம்பேறிகளல்ல. திராவிட நாட்டிலே புதியதோர் சக்தியை உண்டாக்கவல்லவர்கள்.

பணம் படைத்த பலர்!

திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்ததும், பலரிடம் தவறான கருத்து ஏற்பட்டது. அந்தத் தவறான கருத்தைத் தரைமட்டமாக்கி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கினோம். முதலில் நாம் துவக்கியபோது நம்மிடம் பத்திரிகை இல்லை, அச்சகம் இல்லை ஒரு கட்சி ஏற்படுவதற்கு வேண்டிய சாதனங்கள் எதுவும் நம்மிடம் இல்லை! நம் கழகத்தில் பணம் படைத்தவர் பலர் உண்டு, ஆனால் அந்தப் பணம் இந்தக் காரியத்துக்குப் பயன்படாது. பணபலமில்லாமல் பத்திரிகையை நடத்தி வருகிறோம். பெஷின் இல்லா-



பல்லாயிரவரிடையே...

மல் அச்சகம் வைத்திருக்கிறோம். ஒரு கட்சிக்கு வேண்டிய சாதனங்கள் பல இல்லாமலே நாம் காரியத்தைச் சாதிக்க முடியும்.

திருச்சிக்கருகே தவுட்டுப் பாளையம் என்ற அழகிய கிராமம் இருக்கிறது. அக்கிரமத்தின் அருகே காவிரிக் கரை. அங்கே இரவு 12 மணி வரை கூட்டம். இரவு 12 மணிக்கு மேல் அங்கே படுத்திருந்த காலையில் சிறியதோர் தோணியில் ஆற்றைக்கடந்து அக்கரையை அடைந்தோம். இக்கரையில் இரவு 10 மணிக்குக் கூட்டம் அக்கரையிலே மறுநாள் காலை 11 மணிக்குக் கூட்டம் இதற்கிடையிலே அழகான காவிரி ஓடுகிறது.

நம் படை சாதனை

சர்க்காரால் சாதிக்க முடி-



கழகக் கொடி கவினுற பறந்திட...

யாத காரியங்களையெல்லாம் நம் படை சாதிக்கும் நம் படையால் சாதிக்க முடியாத காரியங்களே இல்லை! நாட்டிலே புராண அறிவைப் போக்கி, சனாதனச் சனியனை ஒழித்து நல்லறிவுப் பிரசாரத்தைச் செய்ய நம் சர்க்காரிடமோ பணம் இல்லை! மாகாண சர்க்கார் டெல்லி சர்க்காரைப் பணம் கேட்டால் இல்லை! இல்லை! என்றே பதிலே வருகிறது. காவிரியைக் காட்டி, தாம்பிரபரணியைக் காட்டி, வைகையின் வளத்தைக் காட்டி, நம்முடைய சர்க்கார் 6 கோடி டெல்லியைக் கடன் கேட்டும் இல்லை என்ற பதிலே வந்தது. டெல்லி சர்க்காரிடம் எங்களைக் கடன் கேட்க அனுப்பவேண்டாம். கடையைக் ஆற்ற அனுப்பட்டும்! சர்க்காரால் செய்ய முடியாத காரியத்தை நாங்கள் செய்து காட்டுவோம். டெல்லி சர்க்காரிடம் போராட எங்களை கறுப்புமா சர்க்கார்?

தென்றலும் புயலும்

நம்முடைய சர்க்கார் தென்றலைப் பயன்படுத்தினால் அது தென்றலாகவே இருக்கும். தென்றலைப் பயன்படுத்தாமல் விட்டால், தென்றல் புயலாக மாறும். பூந்தோட்டத்திலே தென்றலை உலாவவிட்டால் நாட்டு மக்களுக்கு நல்ல இன்பம் கிடைக்கும். தென்றலைப் புயலாக்கிய சியாங்கேய்ஷேக் என்ன ஆனார்? ஹிட்லர் என்ன ஆனார்? உருமாறிப் போனாரே! முசோலினியின் கதி என்ன ஆயிற்று? தென்றலைப் புயலாக்கிய காரணத்தால் சியாங்கேய்ஷேக் பார்மோசா தலைநகரிலே ஒளிந்துகொண்டு வாழ்கிறார். தென்றலைப் புயலாக்கிய சியாங்கெய்ஷேக் சிந்தனை குழம்பியிருக்கிறார் இப்போது.

நாங்கள் ஓட்டு வேட்டையிலே ஈடுபடாதவர்கள். தென்றலைப் புயலாக்க சர்க்கார் விரும்புகிறார்களா? தென்றலைப் புயலாக்க சர்க்கார் விரும்பினால் நாம் சர்க்காரைக் கேட்க விரும்புவது இதுதான். மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை சொல்லியது போல "இடை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?" என்றுதான் கேட்போம்.

எங்களுக்குத் தெரியாதா?

1942-ல் இரயிலைக் கவிழ்த்ததைப்போல நமக்கு கவிழ்க்கத் தெரியாதா? தந்திக்கம்பியை அறுக்கத் தெரியாதா? நன்றாகத் தெரியும் ஆனால் அந்த அழிவுச் சக்தியிலே நமக்கு விருப்பமில்லை என்று பல இடங்களிலே ஒளிவுமறைவு இன்றி சொல்லியிருக்கிறேன். அழிவுச் சக்தியில் விருப்பமில்லாத எங்களை சர்க்கார் பயன்படுத்தினால் ஆக்க சக்திக்கு வழிகோலுவோம்.

இங்கே சிங்கங்கள் இருக்கும்போது, மயில்கள் செந்தநாட்டிலே இருக்கும்போது நம் சர்க்காருக்குக் கவலை ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கிய அன்றே புதியதோர் பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆரியமாயை வழக்குக்காக பலமுறை முக்கியமான அலு-



அஞ்சாநெஞ்சன் அழகிரி பந்தலில்...

வல்களையெல்லாம் விட்டுவிட்டு திருச்சிக்கு சென்று வருகிறேன். அடிக்கடி வாய்தா போடுகிறார்கள். கம்பராமாயணசீவர் கலாரசிகர் தோழர் பாஸ்கரத்தொண்டைமான்தான் இந்த வழக்கை விசாரிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆரியமாயைக்கு அவர்கள் தடைவிதித்து என்னைச் சிறையில் தள்ளினால், மறுநாளே ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் மூலம் ஆரியமாயை அச்சாகி எங்கும் பறக்குமே!

சர்க்கார் இப்பொழுது ஆரியமாயை, இலட்சிய வரலாறு, இராவண காவியம் போன்ற நல்ல நூல்களைப் படித்து வருவதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

"அண்ணாதுரை உள்ளதைத்தான் எழுதினான்" என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்ததே. சர்க்கார், நூல்களின் மீது தடை விதிப்பதை விட்டுவிட்டு முக்கியமாக செய்ய வேண்டிய காரியங்களில் ஈடுபடுவது நல்லது.

செய்ய வேண்டிய காரியங்கள்

இராமநாதபுரம் ஜில்லாவில் சுற்றிப்பார்த்தால் ஆடு மாடுகளெல்லாம் எலும்பும் தோலுமாய் காணப்படுகின்றன, அவைகளெல்லாம் சுடுகாட்டுக்குப் போகும் நிலையில் இருக்கின்றன. வயல்கள் எல்லாம் வெடித்துக் காணப்படுகின்றன. கதிர்களெல்லாம் காய்ந்து வயல்களிலே மடிந்து கிடக்கின்றன. மக்களுடைய அறிவில்லாத குறை. வேலையில்லாத குறை. அடையில்லாத குறை. [illegible] இவையும் நீக்க வேண்டிய பொறுப்பு நம் சர்க்காருக்கு இருக்கிறது. இந்த ஏழ்மை நிலை வளர்ந்தால் வங்காளத்தில் வந்த பஞ்சம் இங்கு வந்துவிடுமோ என்று வருந்துவதாக ஒரு பெரியார் கூறியுள்ளார். பஞ்சம் எல்லா ஜில்லாக்களிலும் ஏற்படும் என்று எல்லா ஜில்லா கலெக்டர்களும் அரசாங்கத்துக்குத் தெரிவித்து விட்டார்கள். இந்த அவல நிலையைப் போக்கும் மார்க்கத்தைத் தேடாமல், அடக்குமுறைப் பாணத்தை வீசிப்பலர் என்ன காணமுடியும்?

ஏழையின் கண்ணீர்!

வரியை வாங்கும் சர்க்கார் இனி என்ன செய்யப் போகிறது? ஏழைகள் புனல் சொரிகிறார்களே! ஏழைகள் சொரியும் கண்ணீர் செந்நீராக மாறி, பின்னர் புரட்சியாக மாறும் என்பதைச் சர்க்கார் உணர்வார்களா? புரட்சித் தீயில் ஏராளமான சாம்ராஜ்யங்கள் வீழ்ந்து மண்ணானதை சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நன்கு தெரியும். அறிவான வேலையை நாட்டிலே உள்ள சர்க்கார் செய்ய வேண்டும்.

கைத்தறி நெசவாளர்கள் கையைத் தலையணையாக வைத்துகொண்டு படுத்துகிடக்கிறார்கள். அவர்களின் உழைப்பிலே மண் விழுந்துவிட்டது. பஞ்சாலைகளிலே உள்ள ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆலையிலே பஞ்சு கிடைக்காத காரணத்தால் ஆலை முதலாளிகள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். 200ம் நம்பர் நூலைப் பார்த்தனை, அழகிய டைமண்ட் சேலையை நெய்தனை, சரிகைபட்டு இவைகளைத் திரித்த பொன்னை, இன்று பவானி, அணைக்கட்டின் தண்ணீர்த் தேக்கத்திலே வேலை செய்-



பொதுச் செயலாளர் பேசுகிறார்!

கிறது. அங்கு வேலை செய்யும் தமிழ்த் தோழரிடையே நாம் சென்று உன் தகப்பன் பெயர் சேரன், செங்குட்டுவன், பாண்டியன் என்று அடிக்கடி கூறியுள்ளோம். நம் இனத்தார்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

கோவை மாவட்ட தி. மு. கழக

முதல் மாநாடு

29-1-50 ஞாயிறு காலை 8-மணிக்கு

கணியூரில், தோழர் த. அ. முஹமது உசேன் ராவுத்தர் அவகள் இடத்தில் அமைந்திருக்கும்

"அர்ச்சுனன் பந்தலில்" நடைபெறும்

நகைச்சுவை அரசு
என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்
வில்லுப் பாட்டுடன் மாநாடு துவங்கும்

மாநாட்டுத் தலைவர், கொடி உயர்த்துபவர்:
தோழர் ப. உ. சண்முகம்
(திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர்)

மாநாட்டைத் துவக்குபவர்:
தோழர் ஜி. பி. சோமசுந்தரம்
(பேளுக்குறிச்சி)

மாநாட்டில் தோழர்கள்:

சி. என். அண்ணாத்துரை எம். ஏ.	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.	என். வி. நடராசன்
கே. ஏ. மதியழகன் பி. ஏ.	டி. கே. சீனிவாசன்
க. அன்பழகன் எம். ஏ.	சி. பி. சிற்றரசு
இரெ. இளம்வழுதி பி. ஏ.	ஏ. சித்தையன்
மு. கருணாநிதி	இராம. அரங்கண்ணல்
ஈ. வெ. கி. சம்பத்	கோபி ஜி. என். ராசு
	எஸ். ஆர். சுப்பிரமணியம்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

★

இரவு 10-மணிக்கு

—— சந்திரமோகன் ——

நாடகம், தாரை ஏ. கே. எஸ். நாடக சபையாரின் சீன் செட்டிங்ஸ், போக்கஸ் லைட்டுகளுடன் மிகச்சிறப்புடன் நடைபெறும்

நாடகத்தில்
தோழர்கள் சி.என். அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத், கே.ஆர். இராமசாமி
ஆகியோர் நடிப்பார்கள்

நாடகத்திற்கு நகைச்சுவை அரசு
என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்
தலைமைதாங்குவார்

★

மாநாட்டுக் கட்டணம்:—

வரவேற்புக் கழக உறுப்பினர்	ரூ. 5—0—0
பிரதிநிதிக் கட்டணம் (உணவுட்பட)	ரூ. 2—0—0
பிரதிநிதிக் கட்டணம்	ரூ. 1—0—0
பார்வையாளர் கட்டணம் (பெண்களுக்கு மட்டும்)	ரூ. 0—8—0

நாடகத்திற்குத் தனியாக டிக்கட் கிடையாது

கே. ஏ. முருகேசன்,
செயலாளர்.

பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி
வரவேற்புக் கழகத் தலைவர்.

துணைச் செயலாளர்கள்:
கே. எஸ். முத்து,
எம். உதுமான்

ஆர். மீனாட்சிசுந்தரம்,
பொருளாளர்.

டி. வெங்கடாசலம்,
விளம்பர உறுப்பினர்.

குறிப்பு:—கணியூர் பழனி—கோவை மார்க்கத்தில் மடத்துக்குளம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வடக்கில் 2 மைல் தொலைவில் உள்ளது. போக்குவரத்துக்கு தனி பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
இரவு வண்டிகளில் வருபவர்கள் கமலாபுரம் ரோடு, ரயில்வே ஸ்டேஷனில் இறங்க வேண்டும். ஸ்டேஷனில் தொண்டர்கள் தயாராய் இருப்பார்கள்.
தாராபுரம்—உடுமலை மார்க்கத்தில் ஸ்பெஷல் பஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது மாநாட்டிற்கு உணவு ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளன. வெளியூர்த் தோழர்கள் படுக்கையுடன் வரவும்.

31—1—50 கடைசி நாடகம்

K. R. ராமசாமியின்
கிருஷ்ணன் நாடகசபையாரின் புதியநாடகம்
ஈரோடு, அர்ச்சுனன் அரங்கில்
24-1-50 முதல் 31-1-50 வரை 7 நாட்கள்

K. R. ராமசாமி நடிக்கும்

"துளி விஷம்"

டைரக்டர் A. S. A. சாமி தயாரித்தது

தினசரி இரவு 10-மணிக்கு
30-1-50 திங்கட்கிழமை நாடகம் உண்டு
29-1-50 ஞாயிற்றுக்கிழமை
நாடகம் இல்லை

சிந்தனையாளர் சாக்ரடீஸ்..!

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு காலத்திலே நாட்டை ஆண்டவர்கள் என்றும் கூறியுள்ளோம்.

சிந்தைக்கு விந்தை!

நமமுடைய சாக்காரின் போக்கு என் சிந்தைக்கு விந்தையாகவே இருக்கிறது. பொங்கல விழாவுககு சி. ஐ. டி. களை அனுப்புகிறாாகளே நம் சர்க்கார். டதவிப்பானையிலே, ஆணவ நீரை ஊற்றி, அறியாமை அரிசியைப் போட்டு, கோபத் தீயிலே பொங்கவிடுகிறார்கள் சாக்கார். அதிலிருந்து பொங்கலா கிடைககும்? நாங்கள் ஜனநாயகப் பானையிலே அன்பெனும் நீர் ஊற்றி, அறிவுச சோறாக்கி இனிய பொங்கலைத் தருகிறோம் மக்கள் ஏற்றுக கொள்ளுகிறார்கள்.

மறைமலை அடிகளார், வேதாசலம் என்ற பெயரை மாற்றி அமைத்துக்கொள்வதால் தமிழர்கள் வெறியர்கள் என்று சொல்லுகிறார் மந்திரி மாதவமேனன். மலையாள மாதவமேனனார் தமிழின் தன்மையை, சிறப்பை, அழகை உணர்வாரா?

இப்பொழுது ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ ஜகத் ஸ்ரீமான இவைகளை நீங்கள் எங்காகிலும் கேட்க முடிகிறதா? ஆயினும் ஏககால் மணடபங்களிலே நூற்றுக்கால் மணடபங்களிலே வேண்டுமானால் கேட்கலாம். மக்கள் மன்றத்திலே நீங்கள் இச்சொற்களை கேட்க முடியாது. 67 ஆண்டுகளுககு முன்னே—ஸ்ரீ சத்தியமூர்த்தி, ஸ்ரீஜத் இராஜகோபாலாச்சாரியார் ஸ்ரீமான சீனுவாச ஐயங்கார் என்றிருந்தது. இப்பொழுது அப்படி யாரேனும் சொல்லுகிறார்களா? இல்லையே! ஏன்? சுதேசமித்திரன் பத்திரிகையே தன்னுடைய பழைய முறையை மாற்றி அமைத்துக் கொண்டு, சத்தியாக்கிரகத்துக்கு அறப்போர் என்று எழுதுகிறதே! சேனாதிபதி என்பதைத் தளபதி என்று எழுதுகிறதே! நாம் பெயரை மாற்றி அமைத்துக்கொள்ளுகிறோமென்றால், ஒரு கருத்தோடு தான் பெயரை மாற்றி அமைக்கிறோம்.

சங்கராந்தியும் பொங்கலும்

பலவருடங்களுக்கு முன்னே சங்கராந்தி பண்டிகை என்றிருந்தது. இப்பொழுது சங்கராந்தி பண்டிகை என்று சொன்னால் அப்படி ஒரு பண்டிகை இருக்கிறதா? என்று கேட்பார்கள். இப்பொழுது பொங்கல், அதுவும் தமிழர் திருநாள் என்று சொன்னால் தான் தெரியும். சங்கராந்தி என்று இருந்தபோது சூரிய பகவானுக்குப் பூஜை செய்வதோடு, ரதத்திலே சூரியன் ஏழு குதிரைகளோடு கிழக்கிலிருந்து மேற்குக்கு வருகிறான் என்று எண்ணியிருந்தார்கள். இப்பொழுது அதனை உழவர் திருநாள் என்று எவ்வளவு அழகாக மாற்றி அமைத்து விட்டோம்.

சங்கராந்தி பண்டிகை என்றதும் ஒற்றைச் சக்கரம், தேர் ஏழு குதிரை இவைகளோடு வழுககி விழுந்து சூரியன் மறைகிறான் ஓடுகிறான் என்று தானே முன்னால் நம்பியிருந்

இனி நடப்பவை

சென்னை—சென்னை நக்கீரர் கழகத்தின் ஆண்டு நிறைவு விழாவும், முத்தமிழ்த் திருநாளும் ஜனவரி 29, 30, 31, ஆகிய தேதிகளில் தங்கசாலை தெரு, தொண்டை மண்டல உயர்நிலை பள்ளியில் நடைபெறும். 29-1-50 ஞாயிறு மாலை 5 மணிக்கு இயற்றமிழ்த் திருநாளும், 30—1—50 திங்கள் மாலை 5 மணிக்கு இசைத் தமிழ்த்திருநாளும், 31—1—50 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு நாடகத் தமிழ்த் திருநாளும் நடைபெறும். பல அறிஞர்கள் கலந்து கொள்வர்.

* * *

ஆம்பூர்—சானாங்குப்பம் தி. மு. க. கிளையின் சார்பில் 29-1-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு, வ. உ. சி. மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் முனிசாமி தலைமை வகிப்பார். தோழர் க. செஞ்சோழன், துரை அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

Printed & Publishbyed T. M. Parthasarathy atthe MercantilePress. 2/45, Muthumari Chetty Street, Madras-1.